بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/09/2022 அன்று அமெரிக்காவின் சீயோன் (zion) நகரத்திலுள்ள ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஒவ்வொரு வெற்றியின் அடையாளமும் நமக்குள் ஒரு புரட்சியை உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இன்றைய நாள் நமக்கும், நமது பிள்ளைகளுக்கும் நமது சந்ததிகளுக்கும் ஓர் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்தும் நாளாக இருக்கும் என்று உறுதிமொழி எடுங்கள்.**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்று நீங்கள் சீயோன் பள்ளிவாசல் திறப்புக்காக இங்கு ஒன்று கூடியுள்ளீர்கள். **அல்லாஹ், அமெரிக்கா அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்தப் பள்ளிவாசலை, ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு சிறப்பு முக்கியத்துவம் வகிக்கும் நகரத்தில் கட்டுவதற்கான நல்வாய்ப்பு வழங்கியுள்ளான்.**

**இந்த நகரத்தின் வரலாற்று ரீதியான முக்கியத்துவம்,** ஒரு பெயர்தாங்கி வாதம் புரிந்தவன், அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் குறித்து தவறான சொற்களைப் பயன்படுத்துதல், பிறகு அவன் அழிந்து போதல் மற்றும் இந்த நகரத்தில் ஜமாஅத் உருவாகுதல் ஆகிய விஷயங்கள் ஒவ்வோர் அஹ்மதியையும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவராக ஆக்குகிறது; ஆக்கவும் வேண்டும்.

இதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க நாம் இந்த நகரத்து மக்களுக்கும் நன்றி செலுத்துகிறோம். ஆரம்பத்தில் கவுன்ஸில் பள்ளிவாசல் கட்டுவதை எதிர்த்து, அனுமதி மறுத்து விட்ட போதும் கூட, இந்த மக்கள் நமக்கு ஆதரவாக நின்றார்கள். நமக்குப் பள்ளிவாசல் கட்ட அனுமதி வழங்குமாறு கவுன்ஸிலை நிர்பந்தித்தார்கள். நாம் நமக்கு இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கு நல்வாய்ப்பு வழங்கிய அந்த மகத்தான இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

எனவே, இந்த வகையில், அஹ்மதிகளாகிய நமக்கு வெறும் ஒரு மகிழ்ச்சிக்கான நாள் மட்டும் இல்லை. அதற்கும் மேற்பட்டு, மிக அதிகமாக நன்றி செலுத்துவதற்கான நாளுமாகும். இது நமக்குப் பள்ளிவாசலைக் கட்டுவதுடன் சேர்த்து காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் உண்மைக்கான உயிருள்ள அடையாளத்தையும் காட்டியுள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் இருந்து செய்தி பெற்று, இன்றிலிருந்து 120 ஆண்டுகளுக்கு முன்பு எந்தப் பொய் வாதியின், இஸ்லாத்தின் எதிரியின் அழிவிற்கான முன்னறிவிப்பை செய்தார்களோ, இன்று அந்த மனிதனின் நகரத்தில், எ(ந்த நகரத்)தைக் குறித்து, எந்த முஸ்லிமும், தான் கிறிஸ்தவர் ஆகாத வரை அதில் நுழைய முடியாது என்று அவன் அறிவித்திருந்தானோ, அங்கு பள்ளிவாசல் கட்டுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். இவை வாக்குறுதிகள் நிறைவேறுதவற்கான காட்சிகள் இல்லை என்றால், வேறு என்ன?

ஆக, இவைதான் அல்லாஹ்வின் பணிகளாகும். அல்லாஹ் பல நூறு கோடிகளுக்கு அதிபதியாக இருந்தவனை, பௌதீக கண்ணியமும் மேன்மையும் கொண்டிருந்தவனை பொய்யனாக்கி விட்டான்; அழித்து விட்டான். பஞ்சாபின் ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வந்த, தன் புறமிருந்து அனுப்பப்பட்டவர், இஸ்லாத்தின் மறுமலர்ச்சி குறித்து செய்த அந்த வாதம் உலகின் 220 நாடுகளில் ஒலிப்பதற்கான ஏற்பாட்டையும் செய்து விட்டான். ஆனால், இங்கு நமது பணி முடிவடைந்து விடுகிறதா?

அமெரிக்காவின் ஒரு சிறிய நகரத்தில் நாம் பள்ளிவாசல் கட்டிவிட்டோம்; ஜமாஅத்திற்கு முன்னேற்றம் கிடைத்து விட்டது என்ற இதுவே போதுமானதா? இல்லை! அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுக்காகவோ முழு உலகையும் செயல்களமாக ஆக்கியுள்ளான். நாமோ ஒவ்வொரு சிறிய நகரம், பெரிய நகரம் மற்றும் நாடுகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அடிமைத்துவத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்.

நாம் நமது வழிவகைகளைப் பார்த்தோமேயானால், இது பெரிய, விசாலமான பணியாகத் தென்படுகிறது. ஆனால், இவ்வாறெல்லாம் இருந்தும் கூட, அல்லாஹ் இந்தப் பணியை நமது பொறுப்பில் ஒப்படைத்துள்ளான். இதுவும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதியாகும். ஆனால், அன்னார் கூறினார்கள்:

செய்யப்படும் இந்த பணிகள் அனைத்தும் நமது அற்பமான முயற்சிகள் ஆகும். உண்மையில் இத்துடன் துஆக்களின் தேவை இருக்கிறது. துஆக்கள் மூலமாகவே இந்தப் பணிகள் நடைபெறும்.

எனவே, நாம் இந்த முக்கியமான விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். பள்ளிவாசல்களும் கூட, அதில் மக்கள் இபாதத் செய்ய ஒன்று கூடுவதற்காகவே, ஐவேளை அல்லாஹ்வுக்கு முன் வருவதற்காகவே, மேலும், ஜுமுஆக்களை முறையாகப் பேண வேண்டும் என்பதற்காகவே கட்டப்படுகின்றன. உலகக் கேளிக்கைகளிலும் உலகப் பணிகளிலும் உங்களது இபாதத்தை மறந்து விடாதீர்கள். நாம் நமது இபாதத்களை மறந்து விட்டால், இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதென்பது வெறும் வெளிப்படையான கட்டடத்தை நிறுத்துவதாக ஆகிவிடும்.

இங்கு முஸ்லிம்களின் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுவிட்டது என்று நாம் உலகத்திற்குக் கூறுபவர்களாக இருப்போம். ஆனால், இந்தப் பள்ளிவாசலின்

அருளிலிருந்து நாம் பலன் பெறுபவர்களாக ஆகும் அளவுக்கு அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் உதவியாளர்களைச் சேர்ந்தவர்களாக ஆகும் அளவுக்கு நமது செயல்கள் அல்லாஹ்வின் பார்வையில் தகுதி பெற்றவையாக இருக்காது. அன்னாரோ இவ்வாறு கூறியிருக்கிறார்கள்:

'தொடர்ச்சியாக துஆக்கள் செய்வதன் மூலமாக எனது உதவியாளர்களாக ஆகுங்கள். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் அருள்கள் வேகவேகமாக நிறைவேறக் காண்போம்.'

எனவே, இன்று நம்மில் ஒவ்வொருவரின் பணி என்னவென்றால், நாம் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களுக்காக, நமது இபாதத்களை நமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். நமது பிள்ளைகளுக்கும் இபாதத்கான வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைப்படி நமது தொழுகைகளை நிறுத்தி நிதானமாகத் தொழ வேண்டும். கலப்பற்றவர்களாக ஆகி அல்லாஹ்வுக்கு முன் குனிய வேண்டும். அவனிடம் மேற்கொண்டு வெற்றிகள் கிடைப்பதற்கு நல்வாய்ப்பைக் கேட்க வேண்டும்.

நம்மில் இவை அனைத்தும் கிடைத்து விடுபவர்கள், பிறகு, அல்லாஹ்வின் அருள்மழைப் பொழிவதைக் காண்பவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாக இருப்பார்கள்! நாம் நமது இபாதத்களின் தரத்தை உயர்த்துவோமே ஆயின், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்போமே ஆயின், பிறகு, அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களிடம் செய்துள்ள அந்த வாக்குறுதிகளை நம் வாழ்நாளிலேயே நிறைவேறக் காண்போம்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இஸ்லாத்தின் வெற்றிக்கான வாக்குறுதியளித்திருந்த போதும், பத்ர் யுத்தத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உருக்கமான மன்றாடல், பணிவு, அச்சம், பயம் மற்றும் துஆ ஆகியவை ஒரு மாபெரும் தரத்தை எட்டியிருந்தன. இது பற்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்ட போது, **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

'அல்லாஹ் தேவையற்றவன் ஆவான். வெற்றிகளிலும் சில மறைவான நிபந்தனைகள் இருக்கும். எனவே, அல்லாஹ்விடம் மிகவும் அழுது மன்றாடி அவனது உதவியை வேண்டுவதே எனது பணியாகும்'.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'இறைவனுக்காக மாய்ந்து போன அந்த நபரின் துஆக்கள் தான் இந்தப் புரட்சியை ஏற்படுத்தின.'

ஆக, இன்றும் இறைவனுக்காக மாய்ந்து போன அந்த நபரின் உண்மை அடிமையின் துஆக்களே, அவற்றிற்கான நேரத்தில் நிறைவேறி, உலகை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலடிகளின் கீழ் கொண்டு வரும். ஆனால், ஹஸ்ரத் **வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** 'என்னைச் சேர்ந்தவராகக் கூறிக் கொள்ளும் நீங்கள்

உங்களுடைய துஆக்கள் மற்றும் உங்களுடைய செயல்கள் மூலமாக எனக்கு உதவி செய்யுங்கள்.'

இன்று நாம் இந்தப் பள்ளிவாசலில் அமர்ந்து இதைத் துவக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம். இதற்குப் பெயரும் கூட ஃபத்ஹே அஸீம் (மகத்தான வெற்றி) பள்ளிவாசல் என்று வைத்துள்ளோம். இந்தப் பெயர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம்கள் மற்றும் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப வைக்கப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று டூயியின் அழிவிற்கான முன்னறிவிப்பை செய்தார்கள். மேலும், கூறினார்கள்:** 'மகத்தான வெற்றி ஏற்படும் இந்த அடையாளம் விரைவில் வெளிப்படும்'.

**15, 20** நாள்களுக்குள்ளேயே அல்லாஹ் அவனை மிகவும் இழிவுடன் அழித்து விட்டான் என்பதை உலகம் பார்த்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று, அவனது அழிவிற்கான அடையாளத்தை மகத்தான வெற்றியாகக் கூறினார்கள். மேலும், இன்று அதன் அடுத்த கட்டமாக, நாம் இந்த நகரத்தில் பள்ளிவாசலைத் திறக்கிறோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாமின் ஒரு பங்கை நாம் ஏறத்தாழ **115** ஆண்டுகள் முன் நிறைவேறக் கண்டோம். நாம் அதன் அடுத்த கட்டம் இன்று நிறைவேறக் காண்கிறோம்.

*இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அப்போதைய உலகப் பத்திரிக்கைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுடைய சவாலுக்குத் தமது பத்திரிக்கைகளில் இடமளித்தது பற்றியும் அவனது அழிவின் செய்தியைத் தெரியப்படுத்தியது பற்றியும் இவ்வாறு எடுத்துக் கூறினார்கள்:*

ஆக, இது இறைவனின் அடையாளமாக இருந்தது. அதை உலகம் ஏற்றுக் கொண்டது.

***The Sunday Herald Boston* எனும் பத்திரிக்கையின் 1907 ஆம் ஆண்டு ஜூன் 23 தேதி இதழில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் அறிமுகம், வாதம் மற்றும் சவால், மேலும், டூயி உடைய பரிதாபமான அழிவைப் பற்றி எழுதப்பட்டுள்ள விபரங்களை, விளக்கங்களை சுருக்கமாக எடுத்துரைத்த பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மேற்கொண்ட பணி மிகவும் விசாலமானது. இதுவோ ஒரு போர்க்களத்தின் ஓரிடத்தின் வெற்றியைப் பற்றிய குறிப்பாகும். நாம் உலகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலடியின் கீழ் கொண்டு வரும் போது தான் நம்முடைய உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். அதற்காக நாம் இப்போது இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டதுடன் தப்லீஃகுக்கான புதிய வழிகளைத் தேட வேண்டும். முஹம்மதிய மஸீஹின் ஆதாரங்களை உலகத்திற்கு முன்னால் எடுத்து வைக்க வேண்டும். முன்னரை விட அதிகம் நமது செயல் நிலையையும் ஆன்மீக நிலையையும் மேம்படுத்த வேண்டும்.

**உண்மையான மகத்தான வெற்றியோ மக்கா வெற்றியாக இருந்தது. மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ, நேர்வழிபெற்ற கலீஃபாக்களோ அல்லது பின்னால் வந்த முஸ்லிம்களோ**

**தப்லீஃக் பணியை நிறுத்திவிட்டார்களா? இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் எல்லைவரை எட்ட வைப்பதற்கான முழு முயற்சி மேற்கொள்ளவில்லையா? போர்களால் பகுதிகளை வெற்றி கொள்ளவில்லையா?**

ஆமாம்! போர்களும் நடந்தனதான்; ஆனால், மார்க்கம் பரவுவதற்காக அல்ல. மாறாக, அவர்கள் உள்ளங்களை வென்றார்கள். அதனால் தியாகம் செய்யக்கூடிய மக்கள் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்து கொண்டே சென்றார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மூலமாகக் கிடைக்கப் பெற்ற வெற்றியை நிரந்தர தப்லீஃக் மற்றும் துஆக்களால் என்றென்றைக்குமாக ஆக்க வேண்டிய தேவை இருக்கிறது.

அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, கியாமத் வரை இந்த மார்க்கத்தை நிலைபெறச் செய்வதற்காகவும், அதற்கு உறுதிப்பாட்டை வழங்குவதற்காகவும், இறுதி காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியை அனுப்புவான் என்று வாக்குறுதி அளித்திருந்தான். பிறகு, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான்.

அன்னார் உலகிற்குத் தமது வருகையைப் பற்றி கூறினார்கள். வழிவகைகள் இல்லாத போதும் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் உலகின் பல நாடுகளில் அன்னாருடைய தூதுச் செய்தி சென்றடைந்தது. எந்த அளவுக்கு மேன்மையான முறையில் சென்றடைந்தது என்று, டூயீ சம்பந்தமாக நாம் பார்க்கவே செய்கிறோம். அல்லாஹ் அன்னாரின் மூலம் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக விதைத்த விதை ஒரு மேன்மையுடன் உலகில் பரவி பூத்துக் கொண்டே செல்கிறது. ஆக, நாம் நமது வாழ்வின் நோக்கம் என்ன என்ற உண்மையைப் புரிந்து கொள்ளும்போது தான், இன்றைய இந்தப் பள்ளித் திறப்பு மகத்துவமிக்கதாக ஆகும். எனவே, அல்லாஹ்வின் கட்டளைகள்படி செயல்பட்டவாறும் அவனது திருப்தியைப் பெற்றவாறும் பள்ளிவாசல்களை நிரப்புவதே நமது நோக்கமாகும்.

ஆனால், அந்த மகத்தான வெற்றியின் மகிழ்ச்சியில் நாம் நினைவுச் சின்னமாக ஒரு பள்ளிவாசலைக் கட்டிவிட்டு, மகிழ்ச்சி அடைந்து விட வேண்டுமா? நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் துஆக்களின் கனிகளை உண்டோம்; உண்கிறோம். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் தம்மைப் பின்பற்றக் கூடியவர்களிடமும், அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவற்கான வழிகளாகிய அந்தப் பாதையிலேயே செல்லுமாறு வலியுறுத்தியுள்ளார்கள்.

**எனவே, இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்துள்ளோம் என்று வாதம் புரிகின்ற நம்முடைய பணி என்னவென்றால்,** முஹம்மதிய மஸீஹின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரப்ப வேண்டும். இறைவனின் ஏகத்துவத்தை அவர்களுக்கு நிரூபிக்க வேண்டும். நாம் இறைவனுடன் நமக்குத் தொடர்பை ஏற்படுத்தியவாறு இறையச்சத்தில் முன்னேறும் போது தான் இந்தப் பணி நடைபெறும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நமது ஜமாஅத்திற்குக் குறிப்பாக இறையச்சத்தின் தேவை உள்ளது. குறிப்பாக, இறைவன் புறமிருந்த வந்தவராக வாதம் புரியும் ஒருவரைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்ற இந்த சிந்தனையின் காரணமாகத் தேவை உள்ளது. அப்போதுதான் எவ்வகையிலான வக்கிரம், காழ்ப்புணர்ச்சி அல்லது இணைவைத்தலில் மூழ்கியிருந்தாலும் சரி! அல்லது எத்தகைய உலகப் புழுக்களாக இருந்தாலும் சரி! அந்த அனைத்து பேராபத்துகளில் இருந்தும் அந்த மக்கள் ஈடேற்றம் அடையக்கூடும்.

எனவே, நம்முடைய அகத்தூய்மையும் மிகவும் அவசியம். இந்த அகத் தூய்மை ஏற்பட்டால், பிறகு, இறையச்சம் உருவாகும். பிறகு, அடையாளங்கள் மேல் அடையாளங்கள் வெளிப்படுவதை உலகம் பார்க்கும். மேலும், இதுவே வெற்றிக்கான கூடுதல் வழிகள் திறக்கக்கூடிய இடமாகும். இன் ஷா அல்லாஹ்! இதுவே மகத்தான வெற்றியின் உண்மைத்துவத்தை நாம் பார்க்கும் நிலையாகும்.

**முஹம்மதிய மஸீஹின் அடிமைகளே! ஒவ்வொரு வெற்றியின் அடையாளமும் நம்முள் ஒரு புரட்சியை உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இன்றைய நாள் நமக்கும், நமது பிள்ளைகளுக்கும் நமது சந்ததிகளுக்கும் ஓர் ஆன்மீகப் புரட்சியை உருவாக்கக்கூடிய நாளாக இருக்கும் என்று உறுதிமொழி எடுங்கள்.** அவ்வாறு இருக்கவும் வேண்டும். **இல்லை என்றால், டூயி உடைய அழிவினால் அல்லது இந்த நகர மக்கள் டூயீ உடைய பெயர் அறிந்திருக்காமல் இருப்பதனால், இவர்கள் அறிந்திருக்கவில்லை; நாம் அவர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டோம் என்பதனால் நமக்கு என்ன பலன் கிடைக்க முடியும்?**

இந்த மகத்தான வெற்றியின் முன்னறிவிப்பு நிறைவேறியதனால் நமக்குள்ளும் ஒரு புரட்சி உருவாக வேண்டும். ஒரு மாபெரும் புரட்சி உருவாக வேண்டும். நம் நாட்டவரும் உலகமும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்து விட வேண்டும். இறைவனின் ஏகத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக எல்லாத் தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக வேண்டும். அப்போதுதான் பலன் கிடைக்கும். அல்லாஹுத் தஆலா நமக்கும் நம்முடைய சந்ததிகளுக்கும் இந்தத் தரத்தைப் பெறுவதற்கான நல்வாய்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ

اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**